Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி புரட்டாதி 28 ஆம் நாள் ஜ ஆகிர் பிறை 7 (14-10-64) புதன்கிழமை இதழ் 245

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரில்

இன்று




காட்சிதரும் 300க்கு மேற்பட்ட நாளாந்த சித்திரங்களில் இது ஒன்று

# கிரிதரை ஆலை விவகாரம் சூடுபிடிக்கிறது

## அரசாங்கத்தை எதிர்க்க எதிர்க்கட்சிகள் கங்கணம்

### பார்லிமெண்டில் பொலிஸ்பாதுகாப்பு இன்று பலப்படுத்தப்படும்

கொழும்பு, புதன்

பார்லிமெண்டில் இன்று நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளை எதிர்க் கட்சியினரும் அரசாங்கக் கட்சியினரும் மிகவும் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர். நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேராவின் கிரிதரை ஆலை விவகாரம் இடம்பெறுமா அல்லது திரு. பீட்டர் கெனமன் பெயரிலுள்ள பிரேரணையொன்று கொண்டுவரப்படுமா அல்லது கிரிதரை ஆலை விவகாரம்மீதான விவாதம் நடைபெறாமல் வேறு ஏதாவது நிகழ்ந்துவிடுமா என்று பலரும் பலவிதமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர்.

கிரிதரை ஆலை விவகாரம் மீதான விவாதத்துக்கு முன்னர் திரு. பீட்டர் கெனமனின் பிரேரணையொன்று இருக்கின்றது. ஆசிரியருக்கு அரசியல் உரிமை வழங்கவேண்டும் என்று இப்பிரேரணை கோருகின்றது. இதற்கு முன்னறி

(6-ம் பக்கம் பார்க்க)

பூமிக்கு திரும்புமாறு கட்டளையிடப்பட்டதும்.........

## ரஷ்ய "மூவர் கிரகம்" பத்திரமாக இறங்கியது

### விஞ்ஞான ஆராய்ச்சி முழுமை பெற்றுவிட்டதாக அறிவிப்பு

மாஸ்கோ, அக். 13

ரஷ்யாவின் "மூவர் கிரகம்" இன்று பிற்பகல், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இடத்தில் பத்திரமாக வந்திறங்கியது. இந்த விண்வெளிக் கப்பல் 17 வது தடவையாக பூமியை வலம் வந்தபொழுது, பூமிக்குத் திரும்புமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அக்கப்பல் பூமியில் பத்திரமாக இறங்கியது. "மூவர் கிரகம்" 90 நிமிடங்களுக்கு ஒரு முறை பூமியை வலம் வந்து கொண்டிருந்தது.

விண்வெளிக் கப்பலில் சென்ற பைலட்டும், டாக்டரும், விஞ்ஞானியும் சுகமாயிருக்கிறார்கள் என்றும் அவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்களென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. விண்வெளிக் கப்பல் 24 மணிக்கு அதிகமாக வானவெளியில் சஞ்சரித்திருக்கிறது.

இந்தப் பிரயாணம்பற்றி மாஸ்கோ, வானொலி அறிவிக்கையில்; விஞ்ஞான ஆராய்ச்சி முழுமை பெற்றுள்ளதென்றும் வெற்றிகரமாக நடைபெற்ற விண்வெளிப் பயணத்தால் கிடைத்த பயனுள்ள தகவல்கள் இப்பொழுது ஆராயப்பட்டு தொகுக்கப்படுகின்றன வென்றும் தெரிவித்தது.

## குழந்தையிடம் திருடியதாக 'டாக்ஸி' சாரதிமீது வழக்கு

### ஆறு வயது சிறுமி சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

ஒன்பது மாதக் குழந்தை வனஜாவின் கையிலிருந்த தங்க காப்புகளை திருடியதாகவும், வைத்திருந்ததாகவும், விற்றதாகவும் திருக்கோணமலையைச் சேர்ந்த டாக்ஸி சாரதி கே. தங்கவேலாயுதர் மீது குற்றம் சாட்டி மாஜிஸ்டிரேட் திரு. ரீ. ஜே ராஜரத்தினம் முன்னிலையில் யாழ்ப்பாணம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் ஆறு வயதான ரஞ்சிதமலர் சாட்சியமளித்தார்.

ரஞ்சிதமலர் சாட்சியமளித்த போது கூறியதாவது:

அன்லறய தினம் எங்கள் வீட்டிற்கு வந்தவரை எனக்கு தெரியும். அவர் தான் கூண்

(5-ம் பக்கம் பார்க்க)

## கோயில் ஐயர் கொலை வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

கோயில் ஐயர் கொலை வழக்குத் தீர்ப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அப்பீல் விரைவில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட விருப்பதாக அறியப்படுகிறது. இக் கொலையில் உபயோகிக்கப்பட்டதாக கூறப்படும் பொருள்கள் யாழ்ப்பாணத்திலிருந்து சில தினங்களுக்கு முன்னர் கொழும்புக்கு கொண்டு செல்லப் பட்டன.

## பார்லிமெண்டில் இந்திய வேட்டி!

கொழும்பு, செவ்

இன்று நடைபெற்ற பார்லிமெண்ட் கூட்டத்தில் நுவரேலியா எம். பி. திரு. வில்லியம் பெர்னாண்டோ, இந்திய வேட்டி ஒன்றைச் சபை அங்கத்தவர்களிடம் காண்பித்து, அதில் புத்தரின் உருவம் பொறிக்கப்பட்டிருப்பதைச்சுட்டிக்காட்டிக் கண்டனம் தெரிவித்தார் இதற்கு நிதிமந்திரி பதிலளிக்கையில், அடையாளத்தைக் கண்டுபிடிப்பதற்காக ஒவ்வொரு வேட்டியையும் பார்க்கமுடியாதென்றும் இதுபற்றி இந்திய அரசாங்கத்துக்கு அறிவிப்பதாகவும் கூறினார்.

இன்று நடைபெறும்:

## மந்திரிசபையின் அவசர கூட்டம்

### பிரதமரின் யோசனைகளை கரணகொட வெளியிடுவார்

கொழும்பு, செவ்வாய்

பிரதமரிடம் ஆலோசனை பெறும் பொருட்டு செய்ரோ சென்றிருந்த செனட்டர் கரணகொட இன்று காலை கொழும்பு வந்து சேர்ந்தார். காலை புதன்கிழமை காலை நடைபெறும் மந்திரிசபையின் அவசரக் கூட்டத்தில் அவர் கலந்து கொள்வார்.

பிரதமரிடமிருந்து விசேஷ செய்திகளை மந்திரிகளுக்கு தாம் கொண்டுவந்திருப்பதாகவும் இதுபற்றிய விஷயத்தில் பிரதமர் மிகவும் கடினமாக இருக்கிறார் என்றும் செனட்டர் கரணகொட இன்று தெரிவித்தார்.

பிரதமர் தமக்குத் தெரிவித்த ஆலோசனைகளையும் மற்

(6 ம் பக்கம் பார்க்க)

## வாரத்தில் 5 நாட்கள் வேலை

கொழும்பு, செவ்வாய்

வாரத்தில் ஐந்து நாட்கள் வேலைத்திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இத்திட்டம் அடுத்த வருடம் முதல் அமுலாகுமென்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

## இன்று

இலங்கையிலுள்ள இந்திய தூதராலயத்தினர் யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் இன்று இரவு 7-00 மணிக்கு காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் நேருபற்றிய திரைப் படக்காட்சியொன்றை இலவசமாகக் காண்பிப்பார்கள். இந்திய நடன, கலாச்சார திரைப் படமும் இடம் பெறும்.

## லண்டன் பரீட்சை முடிவுகள்

கொள்ளுப்பிட்டி, செவ்

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற வெளிநாட்டு மாணவர்களுக்கான லண்டன் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. சித்தியடைந்த தமிழ் மாணவர்கள் வருமாறு:

இண்டர்மீடியட் (சட்டம்) பரீட்சை: பி. யோகசுந்தரம் (பி. எஸ். ஸி, பொருளாதாரம்)

(6-ம் பக்கம் பார்க்க)



மலிவு விற்பனை

எல்லாப் பொருட்களின்

விலைகளும் குறைக்கப்பட்டிருக்கின்றன.

15 – 10 – 64 தொடக்கம் 25 – 10 – 64 வரை

100 ரூபாவுக்கு மேல் சாமான் எடுக்கும் முதல் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு மூன்று விலையுயர்ந்த பரிசுகள் வழங்கப்படும்.

ஆ. அப்பையா அன் கோ.,

82, காங்கேசன்துறை வீதி, கிளை: 54, பெரியகடை,

யாழ்ப்பாணம்.

போன்: 506 தந்தி: 'வணக்கம்'




சைலால்

முகப்பரு, சொறிசிரங்கு கரப்பான், கக்கூஸ்பந்து, வெட்டுக்காயம், வேனல் கட்டி, தீப்பட்டபுண், சேத்துப்புண், பித்தவெடிப்பு முதலிய சரும வியாதிகளைக் குணப்படுத்துகிறது. துணிகளில் கறைபிடிக்காது

தயாரிப்பவர்கள் "ராதா புறடக்ஸ்"

விநியோகஸ்தர்:- எஸ். சுப்பிரமணியம் அன் கோ

போன்: 541. 53, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு.

நலைவாக்கு

நெஞ்சம் உமக்கேயிடமாக
வைத்தேன் நினையாதொரு
போதும் இருந்தறியேன்.
—அப்பர் சுவாமிகள்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
புரட்டாதி ௴ 28 உ (14-10-64)

## இலங்கையரின் பிரஜாவுரிமை

இலங்கைப் பிரஜாவுரிமையை நிருபிக்கத் தவறினால் இவ்வருட இறுதியில் வர்த்தக ஸ்தாபனங்களில் கடமையாற்றும் பலர் வேலை இழக்கக் கூடிய ஆபத்து இருப்பதாக ஒரு செய்தி கூறுகின்றது. இலங்கையரைப் பாதிக்கக் கூடிய இவ் விஷயத்தில் அரசாங்கம் நிதானமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

அரசாங்கத்தின் இலங்கையர் மயக் கொள்கையின் கீழ் வர்த்தக ஸ்தாபனங்களில் வேலை செய்பவர்கள் தங்கள் பிரஜாவுரிமையை நிருபித்தாலே 1965-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து தொடர்ந்து வேலைசெய்யலாமென்றும் இல்லையேல் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் வேலையிலிருந்து நீக்கப்படவேண்டுமென்றும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வம்சாவளி இலங்கையர் என்பதை நிருபிக்க ஊழியர் ஒவ்வொருவரும் தமது தந்தையாரின் அல்லது பாட்டனாருடைய பிறப்புப் பதிவுப் பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டும். இது எல்லோருக்கும் சுலபமான விஷயமல்ல. இலங்கையில் பிறப்புப் பதிவு 1867-ம் ஆண்டளவில் தான் அமுலுக்கு வந்தது. படிப்பு வாசனையற்ற அக் காலத்தில் எத்தனை பேர் தங்கள் பிள்ளைகளின் பிறப்பைப் பதிந்திருப்பார்கள்? தந்தையாருடைய பிறப்புப் பதிவையே நிருபிக்க முடியாமலுள்ளவர்கள் பாட்டனாருடைய பிறப்புப் பதிவைக் கண்டு பிடிப்பது முடிந்த காரியமா?

வாழ்க்கைச் செலவு அதிகரித்து அன்றாடச் செலவுக்கே அக்கப் பாடுபடும் வர்த்தக ஊழியர்கள் தங்கள் பிரஜாவுரிமையை நிருபிப்பதற்காக பிறப்புப் பதிவுப் பிரதிக்கு மனுச் செய்யவும் இதற்கான முயற்சிகளில் ஈடுபடவும் செலவுக்கு எங்கே போவது? பார்லிமெண்டில் சில சட்டங்கள் நிறைவேறுவதற்குத் தனது வாக்கையும் அளித்த முன்னாள் கொழும்பு மத்திய தொகுதி மூன்றாவது எம். பி. யான மனுவல் சவரியப்பா தேமிஸ் கூட தமது பிரஜாவுரிமையை நிருபிக்க கஷ்டமடையும் போது எளிய வர்த்தக ஊழியர்கள் நிலை என்ன?

தங்கள் பிரஜாவுரிமையை நிருபிப்பதில் வம்சாவளி இலங்கையருக்குள்ள கஷ்டங்களை ஆராய்ந்து அவற்றை நீக்குவதற்கான வழிவகைகளைச் சிபார்சு செய்வதற்கு மூவர் கொண்ட குழுவொன்றை சமீபத்தில் பிரதமர் நியமித்திருந்தார். இக்குழுவின் கடமைகள், அதிகாரங்கள் பற்றி போதிய விளக்கம் கொடுக்கப்படவில்லை. இந்திய வம்சாவளியினர் பிரச்னை சம்பந்தமாக இந்தியப்பிரதமருடன் இலங்கைப் பிரதமர் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் ஓர் உடன்பாடு ஏற்பட்டு அந்த உடன்பாட்டின்படி ஒரு குறிப்பிட்டதொகையினரை இந்தியா ஏற்றுக் கொள்வதானால் இலங்கைப் பிரஜை என்பதை நிருபிக்க முடியாத இலங்கையரும் இந்தியாவுக்கு ஏற்றி அனுப்பக் கூடிய ஆபத்து நேரிடலாமெனக் கருத இடமுண்டு.

பிரஜாவுரிமையை நிருபிக்க வேண்டுமென்ற சட்டதிட்டங்களினால் இந்நாட்டிலுள்ள தமிழர், இஸ்லாமியர் ஆகிய சிறுபான்மையினரே பெரிதும் பாதிக்கப்படுவர். இராமசாமி, சுப்பையா, முகம்மது என்ற பெயரையுடைய இலங்கையர் இப்பொழுதேசந்தேகப்பிரஜைகளாகக் கணிக்கப்படுகின்றனர். இவர்கள் தந்தையினதும் பாட்டனினதும் பிறப்புப்பதிவுப்பிரதியைக் காட்டித்தங்கள் பிரஜாவுரிமையை நிருபிக்கத் தவறினால் அவர்கள் நிலை பரிதாபத்துக்குரியதாகலாம்.

இது மனிதர்கள் சம்பந்தப்பட்ட விஷயம். அரசாங்கம் இதில் தீவிரம் காட்டாமல் மனிதாபிமானத்துடன் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும். ஏற்கனவே சிறுபான்மையினரின் அதிருப்தியைத்தேடிக் கொண்டுள்ள அரசாங்கம் இனியாவது அவர்களை இம்சைக்குள்ளாக்குவது சரியல்ல. பிரஜாவுரிமையை தஸ்தாவேஜுகள் மூலம் நிருபிக்கமுடியாத வம்சாவளி இலங்கையரின் கஷ்டங்களை நீக்குவதற்கு நிரந்தரமான பிரஜாவுரிமை விசாரணைக் குழுவொன்றை நியமிப்பது உபயோகமாக இருக்கும்.

## மதிப்புரை

நவராத்திரிமாலை வெளியீடு: வடஇலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னாகம். விலை: சதம் 70.

சைவ நன்மக்கள் பக்தி சிரத்தையுடன் கொண்டாடும் விழாக்களில் நவராத்திரியும் ஒன்று. எல்லா ஆலயங்களிலும், சைவப்பாடசாலைகளிலும், பொதுமன்றங்களிலும், தொழில்செய்யும் இடங்களிலும் இவ் விழா கோலாகலமாகக் கொண்டாடப்பெறுகிறது. இந்த நவராத்திரி விழாவின் தத்துவத்தையும் நவராத்திரிக் கதைகள் சிலவற்றையும், நவராத்திரிக் காலத்தில் ஆலயங்களிலும்,பாடசாலைகளிலும், பொதுமன்றங்களிலும் ஓதுவதற்கேற்ற பாடல்களையும் சேர்த்து 'நவராத்திரிமாலை' யை வட இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகத்தார் வெளியிட்டுள்ளனர். சரஸ்வதி வணக்கம், சரஸ்வதி அந்தாதி, சகலகலாவல்லிமாலை, மற்றும் கம்பர்,காளமேகம், பாரதியார், கவிமணி, நமது சோமசுந்தரப் புலவர் ஆகியோர் கலைமகள் மீது பாடிய பாடல்களும் இலக்குமி துதி, இலக்குமி தோத்திரம், அபிராமி அந்தாதி. பராசக்தி வணக்கம் ஆகியவைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நல்லகாகிதத்தில் 48 பக்கங்களையுடைய இந்த 'நவராத்திரிமாலை' நவராத்திரி காலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மாணவர்களுக்கும் மற்றையோருக்கும் பெரும்பயனளிக்கும்.



# தேவி துதி

— யாழ்ப்பாணன் —

உள்ளத் துறைந்து பெருக்கெடுக்கும்
உணர்தற் கரிய ஒளிப்பிழம்பே!
தெள்ளத் தெளிந்த தமிழ்வாணர்
தினமும் திளைக்கும் கலைக்கடலே!
வெள்ளைக் கமலம் வீற்றிருக்கும்
விரைசேர் பதத்தாய் பெருமாட்டி!
அள்ளிப் பொழிவாய் அருட் பொழிவே
அகிலம் அளிக்கும் ஆரணங்கே!

கலைகள் திரண்டு கசிந்துருகிக்
கமழ்கான் மறையுங் கடிதொன்றி
அலைகள் புரண்டு கரைபடியும்
ஆழி முகட்டில் அழகொழுக
உலகை மயக்கும் வெண்மதியே!
ஒளிசேர் கிரணம் மிகவுடையாய்!
மலைகள் போலக் கலைகுவிக்கும்
மணத்தார் மனத்துள் நிறைந்தவளே!

வேண்டும் விழையும் பொழுதெல்லாம்
விரும்பும் வரங்கள் விதித்தருளி
யாண்டும் என்றும் என்னுளத்தே
யானும் நீயாய் பிறிதன்றி
ஆண்டுன் அருளைப் பொழிந்திடுவாய்
அடியேன் துறத்தல் பொருந்தாதே
மாண்டென் உடல்விட் டகலுயிரும்
மலர்தாள் தன்னில் ஒன்றுகவே.

நீயென் உடலம் உயிரானாய்
நினைவும் நனவும் நீயானாய்
ஆயும் கலைகள் நீயானாய்
அரும்பொன் மணியும் நீயானாய்
தாயும் சேயும் நீயானாய்
தமரும் பிறரும் நீயானாய்
ஓய்வும் உழைப்பும் நீயானாய்
ஒடுக்கம் உன்றுள் ஒன்றுகவே.

பொய்யும் புரட்டும் புறங்காட்டப்
புதுமை வெள்ளம் பொங்கிவர
ஐயந் திரிபு மென்றிவைகள்
அவனி தனைவிட் டகன்றுவிடச்
செய்ய வாயாற் றிகழ்மறைகள்
செகத்திற் செப்பும் பெருமாட்டி
நொய்யு மிடையாய் நுண்பொருளே
நுன்றன் பாதம் நான்முடிபே.

கையில் வீணை தனையேந்திக்
கமலத் தமர்ந்து மறைதாங்கி
மெய்யில் படிக நிறமுடனே
விளங்கும் பவளச் செவ்வாயும்
வையம் புரக்கும் நகைமுகமும்
வாழ்வு வகுக்குஞ் செயல்களுமாய்
உய்யும் வகையை விதித்தருள்வாய்
உமையே! வாணி! பராசக்தி!

## சமயப்போட்டியில் பரிசுபெறுவோர்

சித்தன்கேணி செவ்வாய்
சித்தன்கேணி, கலைநகர் நேருஜீ சனசமூகநிலையத்தில் கலைநகர் இந்துசமய மன்றத்தினர் கடந்த ஏழு வருடங்களாகத் தொடர்ந்து நவராத்திரி விழாவை நடாத்திவருகின்றனர். இவ் விழாவை முன்னிட்டுக் கலைநகர் இந்துசமய மன்றத்தினரால் நடாத்தப்பட்ட சமயப் போட்டிகளில் பரிசுபெறுவோர் விபரம் வருமாறு:

மேற்பிரிவு: பொ. சண்முகானந்தசிவம், வே. அருமைத்துரை, சு. சிவானந்தன்.

மத்தியபிரிவு: வே. மோகனநாதன், க. பரமநாயகம், பி. வைரவநாதன்.

கீழ்பிரிவு: சோ. தியாகராசா, பொ. பத்மநாதன், த. கதிர்காமநாதன்.

ஆரம்ப பிரிவு: கு. கமலாதேவி, மு. லோகராசா, கா. நற்குணராசா.

## சித்திர-சங்கீத-நாடகப் போட்டி

சித்தன்கேணி கலைநகர் நேருஜீ சனமூக நிலைய கலாமன்றத்தினர் நடாத்திய சித்திர-சங்கீத-நாடகப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்கள் பெறுவோரின் விபரம் வருமாறு:

சித்திரம்

மேற்பிரிவு: பொ. சண்முகானந்தசிவம், இ. பேரானந்தசிவம், சி. தியாகராசா.

கீழ்ப்பிரிவு: தெ. ஜீவானந்தன், க. கந்தஞானி. சீ. ஸ்ரீராசமூர்த்தி. கு. முருகையா.

சங்கீதம்

மேற்பிரிவு: ஐ. சத்தியஞானலிங்கம், க. பஞ்சநாதன்.

மத்திய பிரிவு: க.கந்தஞானி, வே. மோகனநாதன், கு. சிவானந்தன்.

கீழ்ப் பிரிவு: கு. கமலாதேவி, சி. இராசரத்தினம், சோ. தியாகராசா.

நாடகம்

ராஜாஜி இளைஞர் மன்றம்—'பெண்ணாசை', இராமநாதன் இளைஞர் மன்றம்—'இரத்த பாசம்'.

## ஐயாறன் எழுதுவது

சிலநாட்களாக இலங்கை வானொலி கி. வா. ஜ. அவர்களின் நற்சிந்தனையை ஒலிபரப்பியதாயும் நன்றாக இருந்ததாகவும் ஓர் அன்பர் தெரிவித்தார். கி. வா. ஜ இங்கு வந்திருக்கையில் இலங்கை வானொலிக்காரர்கள் அவர் மூலம் பல நற்சிந்தனைகளையும் அருமையான பேச்சுகளையும் ஒலிப்பதிவு செய்ய முடிந்தது பாராட்டத்தக்கதாகும்.

சென்ற திங்களன்று இலங்கை வானொலியில் கி. வா. ஜ.வின் நற்சிந்தனையைக்கேட்கலாமென்று அறிவித்ததும் ஆவலுடன் ரேடியோ பக்கம் வந்து கேட்டேன், யாரோ ஒருதருடைய குரல் கேட்டது. பேசியதும் புரியவில்லை. ஏதோ தவறு ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் இதைஉடன் திருத்திக் கொள்வாரென்று எதிர்பார்த்தேன். ஆனால் அந்தப்பேச்சின் முடிவில், "இதுவரை பேசியவர் கி. வா. ஜகநாதன் அவர்கள்" என்று அறிவித்ததும் திகைத்துவிட்டேன். சென்னையில் கி. வா. ஜ. கேட்டிருந்தால் என்ன நினைப்பாரோ! அதன்பிறகு கத்தோலிக்க நற்சிந்தனையைக் கேட்கலாகமென்று அறிவித்தனர். ஆனால் அதை ஒலிபரப்பாமல், "மன்னிக்க வேண்டும் எதிர்பாராத காரணத்தால் அதை ஒலிபரப்ப முடியவில்லை" என்று கூறி அதற்குப் பதில் ஏதோ இசைத்தட்டை வைத்தனர்.

இந்தத் தடுமாற்றம் பலருக்கும் ஏமாற்றம் அளித்திருக்கலாம். தவறு செய்வது மனிதருக்கு சகஜம், நாமும் எவ்வளவோ தவறு செய்கிறோம். என்றாலும் நற்சிந்தனை விஷயத்தில் இனி அதிக கவனமாக பயபக்தியுடன் அறிவிப்பாளர்கள் இருக்க வேண்டுமென்பதை இச்சம்பவம் எச்சரிக்கின்றது. சில நற்சிந்தனைகள் நன்றாக உள்ளன. சில புரிவதேயில்லை. புரியாத பேச்சுகளை ஒலிபரப்புவதைவிட்டு பெரியோர்களுடைய வாக்குகளை அவர்கள் நூல்களிலிருந்து தெரிவுசெய்து ஒலிபரப்புவது அதிக பயனுள்ளதாக இருக்கும்.

* * *

கொழும்பிலுள்ள செட்டியார் தெருவுக்கு நீங்கள் ஏதாவது காரியமாகப் போக வேண்டுமா? அப்படியானால் ஜாக்கிரதை. கையில் ரிஸ்ட்வாட்ச் பையில் பவுண்டன் பேனா, பணம் எதுவும்கொண்டு போகாதீர்கள். என்னை இப்படி ஓர் அன்பர் எச்சரிக்கை செய்தார். ஏன் என்று கேட்டதற்கு பட்டப்பகலிலே அங்கு வழிப்பறிக் கள்வர் நடமாடுவதாயும் கையில் ரிஸ்ட்வாட்ச் கட்டியிருந்தால் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி மறு கையால் வாட்சை ஒரு திருகு திருகி அப்படியே பறித்துக் கொண்டு போய்விடுவதாயும் பக்கத்தில்செல்பவர்கள் பார்த்தாலும் பார்க்காததுபோல் போய்விடுகிறார்கள் என்றும் சொன்னார்.

மலைநாட்டிலிருந்து அந்தத் தெருவிலே நடந்துசென்ற ஒருவரை, இருவர் பின்தொடரவே அவர் பயந்து செக்கடித் தெருவரை சென்று ஒரு வீட்டுக்குள் புகுந்தாராம். என்றாலும் அக்காடையர் விடவில்லை. வீட்டுக்குள்ளும் பின்பற்றிச் சென்று அவரைப் பிடித்து கத்தியால் பயமுறுத்தி வாட்சைப் பறிக்க முயன்றனர். அச்சமயம் அவ்வீட்டிலிருந்த ஐந்தாறு 'வீரர்'களும் பேசாமல் வாட்சை கொடுத்துவிடுங்கள் என்று யோசனை கூறினார்களாம்!

கடிகாரத்தைப் பறிகொடுத்தவர் பின்னர் பொலிசுக்குச் சென்று புகார் செய்தார். ஸி. ஐ. டி. பொலிஸ்காரர் வந்து விசாரித்து ஒருவனை சந்தேகத்தின்மீது பிடித்து காரில் ஏற்றிக் கொண்டு, இருக்குத்து விடவே அவன் அழுதுகொண்டு

(5-ம் பக்கம் பார்க்க)

# சந்திரனுக்கு முதலில் செல்லும் போட்டியில்

# ரஷ்யாவுக்கு வெற்றி கிடைக்கலாம்

## தங்களைவிட முன்னேற்றம் அடைந்திருப்பதாய் அமெரிக்க அதிகாரிகள் ஒப்புதல்

### ரஷ்ய "மூவர்கிரக" த்திலிருந்து ஒருவர் பிரிந்துவரக்கூடும்?

வாஷிங்டன், அக். 13

**மூவரடங்கிய ரஷ்ய விண்வெளிக் கிரகம் திட்டமிட்டபடி வெற்றிகரமாகப் பூப்பிரதட்சணம் செய்துவரும் அதேசமயம், சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் திட்டத்தில் ரஷ்யா. அமெரிக்காவைவிட மூன்று அல்லது நான்கு வருடங்கள் முன்னேறியிருப்பதாய் அமெரிக்க அதிகாரிகள் ஒத்துக்கொண்டனர்.**

1970-ல் மனிதனைச் சந்திரனுக்கனுப்புவது அமெரிக்காவின் திட்டமென்றும் அமெரிக்க வான்வெளித்திட்டம் இன்னும் வேகமாகச் செயல்படுத்தப்படும் என்றும் அவர்கள் அறிவித்தனர்.

இதுவரை அனுப்பப்பட்ட வான்வெளிக் கிரகங்களிலேயே இப்போது ரஷ்யா அனுப்பியிருப்பது தான் ஆகப்பெரியது என அறிவிக்கப்பட்டது.

ரஷ்யாவின் வான்வெளிக் கிரகத்தில் மேலும் பல அதிசயங்கள் நடைபெறலாமென்றும் அதுபிரயாணம் செய்து கொண்டிருக்கும்போதே ஒருவர் அதிலிருந்து வெளிப்பட்டு பூமிக்குத் திரும்பக்கூடும் என்றும் மாஸ்கோவிலுள்ள பி.பி.ஸி. நிருபர் தெரிவிக்கிறார்.

சுற்றிவரும் கிரகத்தையும் அதில் செல்லும் மூவரையும் நேற்று ரஷ்யாவிலும், ஐரோப்பாவிலுமுள்ள கோடிக்கணக்கான மக்கள் டெலிவிஷனில் கண்டனர். அது செல்லும் வழியெல்லாம் மக்களுக்கு இந்த 3 பிரயாணிகளும் வாழ்த்துத் தெரிவித்தனர். அமெரிக்கா மீது இந்தக் கிரகம் சென்றபோது அந்த நாட்டு மக்களுக்கு மூவரும் வாழ்த்து தெரிவித்தனர். டோக்கியோ ஒலிம்பிக் திடலுக்கு மேல் அது பறந்து வாழ்த்துத் தெரிவித்தது.

"வொஸ்டாக்" கிரகத்தில் பிரயாணம் செய்யும் மூவரும் வான்வெளி உடைகளை அணியவில்லையென்றும், பெண்கள் அணியும் லேசான உடைகளையே அணிந்திருக்கிறார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஐ. நா. தலைவர் யுதாண்ட் ரஷ்யாவின் இச்சாதனைக்கு பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

## பிரதமரை கொலை செய்வதாக பயமுறுத்து

மொண்ட்ரீல், அக். 13

கனடாவுக்கு விஜயம் செய்திருக்கும் பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் குவிபெக் நகருக்குள் அனுமதிக்கப்பட்டால் குவிபெக் பிரதமர் திரு ஜீன் லீஸேஜைக் கொலைசெய்துவிடுவதாயும், அவரது 8 வயதான இளைய புதல்வனைக் கடத்திச் செல்லப்போவதாயும் பயங்கரவாதிகள் எச்சரித்தனர். டெலிபோன் மூலமும், எழுத்து மூலமும் இந்த பயமுறுத்தல் விடப்பட்டிருக்கிறது.

## கம்போடியா முறித்துக்கொண்டது

நாங்பெங், அக். 13

தென்னாபிரிக்காவுடனான ராஜிய வர்த்தக உறவைத் தமது நாடு முறித்து கொண்டுவிட்டது என கம்போடியா அறிவித்திருக்கிறது. கெய்ரோ மண்டலசார்பற்ற மகாநாட்டின் முடிவைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

## 3 பரிசு நாடகங்கள்

புதுடில்லி, அக். 8

1964-ம் ஆண்டுக்கு 3 பரிசு நாடகங்களை சங்கீத நாடக அக்கடமி தெரிவு செய்திருக்கிறது. குஜராத்தி, மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளில் இந்த நாடகங்கள் உள்ளன.

## ஆபிரிக்கர் கலகம்

ஜொகானஸ்பர்க், அக். 13

இங்குள்ள வியூபார்ஸ்வில் தங்கச் சுரங்கத்தில் ஆபிரிக்கர் வீதியில் சென்ற கார்களை கற்களால் தாக்கி கலகம் செய்ததை அடுத்து இரு கவச மோட்டார்களின் உதவியுடன் பொலிஸார் அதை அடக்கினர்.

ஒரு ஆபிரிக்கர் கார் ஒன்றினால் மோதப்பட்டு மரணம் அடைந்ததைத் தொடர்ந்து இக்கலகம் ஏற்பட்டது. கண்ணீர்ப்புகைக் குண்டுகள், ஸ்டென் துப்பாக்கிகள், ரைபிள்கள், ரிவோல்வர்கள், இரு கவச மோட்டார்கள் ஆகியன உடன் கொண்டுவரப்பட்டன.

## பிரேஸிலில் டிகால்

ரியோடிஜெனிரோ, அக். 13

லத்தீன் அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்து வரும் பிரெஞ்சு அதிபர் டிகால் தனது சுற்றுப்பிரயாணத்தின் கடைசி நாளான 10-வது தினமாக இன்று பிரேஸில் நாட்டுக்கு விஜயம் செய்திருக்கிறார்.

## ஹாங்காங்கில் புயல்

ஹாங்காங், அக். 13

ஹாங்காங்கில் புயல் ஏற்பட்டது காரணமாக 2 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். 6 பேர் காணமற்போயினர்.

# "சீன அணுகுண்டு பற்றி தக்க சமயத்தில் எச்சரித்தேன்"

## மண்டல சார்பற்ற மகாநாடு குறித்து இந்தியப் பிரதமர்

புதுடில்லி, அக். 13

பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுடன் தாம் சமுகமான பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இந்தியா—பாகிஸ்தான் உறவு அபிவிருத்தி விஷயத்தில் ஒரு ஆரம்பம் செய்யப்பட்டிருப்பதாயும் இந்தியப்பிரதமர் சாஸ்திரி இங்கு தெரிவித்தார்.

இந்திய—பாகிஸ்தான் உறவுகள் முக்கிய பிரச்னையாதலால் காலதாமதமின்றி அதை தீர்க்க முயலவேண்டும் என ஜனாதிபதி அயூப் தெரிவித்ததாயும் அவர் கூறினார்.

சீனாபற்றி நேரடியாக மண்டலசார்பற்ற மகாநாடு குறிப்பிடாவிடினும் அது அணுகுண்டு உற்பத்தியில் இறங்கியிருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது என்றும், அழிவு நோக்கத்துடன் அணு குண்டு உற்பத்தி செய்வதே இந்தக் கவலைக்குக் காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். தான் தக்க சமயத்தில் இவ்விஷயமாக மகாநாட்டில் செய்த எச்சரிக்கை உலகத் தலைவர்களின் மனதில் நன்கு பதிந்தது என்று சாஸ்திரி கூறினார்.

தமது கெய்ரோ பயணம் பயனுள்ள ஒரு அனுபவமாய் இருந்ததென்றும், இந்தியாவின் மாபெரும் நண்பர் நாஸருடன் திறந்தமனதுடன் தாம் விவாதித்ததாயும் அவர் கூறினார்.

மகாநாட்டின் ஒருமித்த கருத்து சிக்கல்நிறைந்த பகுதிகளில் பிரச்னையைத் தீர்க்க வழிகாணும் என நம்புவதாயும் அவர் கூறினார்.

மகாநாட்டில் காலஞ்சென்ற நேருவுக்குச் செலுத்தப்பட்ட புகழாஞ்சலி தமது உள்ளத்தை உருக்கியதாய் இருக்கிறது என்றும். நேருவின் ஆதர்சசக்தியே மகாநாட்டுக்கு ஊக்கமளித்ததாயும் திரு சாஸ்திரி தெரிவித்தார்.

ஐக்கிய அரபியக் குடியரசுத் தலைவர் நாஸர், பாகிஸ்தான் அதிபர் அயூப்கான், யூகோ அதிபர் டிட்டோ, அல்ஜீரிய அதிபர் பென்பெல்லா, கானா அதிபர் நிக்ருமா, இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோ, எதியோப்பிய சக்கரவர்த்தி ஹைலிஸெலாஸி, சைப்பிரஸ் அதிபர் மக்காரியோஸ், ஸிரியா அதிபர் அரீப் ஆகியோரைத் தாம் இந்தியாவுக்கு வரும்படி அழைத்திருப்பதாயும், பாகிஸ்தானில் விரைவில் தேர்தல் நடைபெறவிருப்பதால் உடனடியாக வர இயலாமல் இருப்பதாக அதிபர் அயூப்கான் கூறினார் என்றும் சாஸ்திரி மேலும் தெரிவித்தார்.

இம்மாத முடிவில் அல்லது அடுத்தமாத ஆரம்பத்தில் இந்தியா-பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரிகள் மகாநாடு நடைபெறக்கூடும் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஒலிம்பிக்

## ரஷ்யாவுக்கு 2 தங்கப்பதக்கம்

டோக்கியோ, அக். 13

நேற்று டோக்கியோ ஒலிம்பிக்கில் கிடைத்த 5 தங்கப் பதக்கங்களில் ரஷ்யாவுக்கு 2 ம், அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு தலா 1 ம் கிடைத்தன.

## வில்சன்

லண்டன், அக். 13

ரஷ்யாவில் "மூவர் கிரகம்" பற்றிக் குறிப்பிட்ட பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் திரு. வில்சன் "அணுஆயுதங்களை இந்த முறையில் அனுப்பக்கூடிய நிலை அபிவிருத்தியடைந்திருக்கிறது" என்றார்.

# ஷோம்பேக்கு மற்றோர் நாடு கதவடைப்பு

## உள்நாட்டில் பொது விடுமுறையுடன் பெரும் வரவேற்பு

லுஸாகா, அக். 13

இம்மாதம் நடைபெறவிருக்கும் வடரொடீஷியா சுதந்திர தினத்தில் கலந்து கொள்ள காங்கோ பிரதமர் ஷோம்பேக்கு அழைப்பு அனுப்பப்படமாட்டாது என இங்கு அறிவிக்கப்பட்டது. பாதுகாப்பு காரணத்தை முன்விட்டே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அதிகாரிகள் கூறினர்.

அதேசமயம் கெய்ரோவிலிருந்து திரும்பிய ஷோம்பேயை வரவேற்க, நேற்று காங்கோவில் பொதுவிடுமுறை பிரகடனம் செய்யப்பட்டது. ஐக்கிய அரபியக் குடியரசின் நடவடிக்கைக்கு இது எதிர்நடவடிக்கை என வருணிக்கப்பட்டது. ஆபிரிக்காவில் நல்லெண்ணம் கொண்டவர்கள் காங்கோவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என திரு. ஷோம்பே கேட்டுக் கொண்டிருக்கிறார். காங்கோ ராணுவ நடவடிக்கையில் தென்னாபிரிக்க விமானிகள் அமர்த்தப்படமாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் வருகிற பெப்ரவரிமாதம் காங்கோவில் பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்களிப்பில் கலந்து கொள்வார்கள் என அறிவிக்கப்படுகிறது.

# பிரேஸிலில் டிகாலுக்கு பிரமாண்டமான பாதுகாப்பு

## 29 டாக்டர்கள், 3000 துருப்புகள் 8000 பொலிசார் தயார்

ரியோடிஜெனிரோ, அக். 13

இன்று பிரேஸிலுக்கு விஜயம் செய்யும் பிரெஞ்சு அதிபர் டிகாலை பத்திரமாகப் பாதுகாக்க பெரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

எந்த நிலையையும் சமாளிக்கும் பொருட்டு இரவும் பகலும் அவருடன் 29 டாக்டர்கள் இருப்பார்கள். தலைநகர் ரியோடிஜெனிரோவில் அவரைப் பாதுகாக்க 3000 ராணுவத்தினர் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஸாபோலோ நகரில் 8000 பொலிசார் டிகாலைப் பாதுகாத்து வருவார்கள்.

ஜெனரல் டிகால் கடந்த சனிக்கிழமை உருகுவேயிலிருந்து யுத்தக் கப்பல் ஒன்றின் மூலம் பிரேஸில் புறப்பட்டார். மிகப் பிரம்மாண்டமான ஜனக்கூட்டம் அவரை மாண்டிவிடியோ துறைமுகத்தில் வழியனுப்பி வைத்தது. ரியோடிஜெனிரோவில் பிரெஞ்சு அதிபர் ஊர்வலம் செல்லும்பாதைகள் நெடுகவுள்ள கட்டிடங்கள் அனைத்தும் கவனமாகச் சோதனையிடப்பட்டிருக்கின்றன. ஸாபாலோ நகரில் 200 பிரெஞ்சுக்காரர்களை பொலிசார் கண்காணித்து வருகின்றனர். இவர்களில் சிலர் ஓ. ஏ. எஸ். இரகசிய ஸ்தாபனத்தில் தொடர்பு கொண்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

ஜெனரல் டிகால் நாளை வந்திறங்கும் ஸாபாலோ விமான நிலையம் கடும் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இதற்கு அருகில் தான் முன்னாள் பிரெஞ்சு பிரதமர் ஜார்ஜஸ்பிடால்ட் இப்போது வசித்துவருகிறார். சமீபத்தில் அவர் பிரேஸில் அரசாங்கத்துக்கு தமது அறிக்கை மூலம் தொந்தரவு கொடுத்த போதிலும் அவரால் டிகாலின் பாதுகாப்புக்கு பேராபாயம் இருக்காது எனக் கருதப்படுகிறது.

# "கியூபா, உலகத்தின் கல்லறையாக இருக்கிறது"

## காஸ்ட்ரோ மீது அவரது சகோதரி தாக்குதல்

மியாமி, அக். 13

தனது சகோதரர் பிடல் காஸ்ட்ரோவின் படுகொலைப் படைகளும், அரசியல் சிறைகளும் கியூபாவை உலகத்தின் கல்லறையாக மாற்றியிருக்கின்றன என காஸ்ட்ரோவின் சகோதரி ஜுவானிட்டா காஸ்ட்ரோ கியூபாவுக்கும் லத்தீன் அமெரிக்காவுக்கும் நிகழ்த்திய ஓர் ஒலிபரப்பில் கூறினார்.

ஹிட்லரின் சிறைகளைப் போல் கியூபா சிறைகளில் மோசனமான நிலையில் வைக்கப்பட்டிருக்கும் 75000 அரசியல் கைதிகள் சார்பில் தலையிடுமாறு அவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தையும் ஐ.நா.மனிதஉரிமைக் கமிஷனையும் கேட்டுக் கொண்டார்.

தமது 25 நிமிஷ வானொலிப் பேச்சில் திரு காஸ்ட்ரோ தன் புரட்சியை கம்யூனிஸத்துக்கு விற்றுவிட்டார் என்றும் வெளிநாடுகளில் அஞ்ஞாதவாசம் புரியும் கியூபாமக்கள் முன்னாள் சர்வாதிகாரி படிஸ்டாவுடன் சேர்ந்து தன் சகோதரர் காஸ்ட்ரோவை அகற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

"காஸ்ட்ரோ, புரட்சியில் வெற்றிபெற்ற 2 மாதங்களுக்குப்பின் 1959-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் எனது சகோதரனைப்பற்றி சந்தேகம் கொண்டேன். காஸ்ட்ரோ பொய் சொல்ல ஆரம்பித்தார். அவை பொய் என நான் அறிந்து கொண்டேன். கியூபா ஜனாதிபதி மனுவேல் உருத்தியாவை 1959-ம் ஆண்டு ஜூன் மாதம் காஸ்ட்ரோ ஒழித்துக் கட்டியபோது தான், என் சகோதரன் ஒரு கம்யூனிஸ்ட் என அறிந்தேன். அதுமுதல் காஸ்ட்ரோவுக்கு எதிராகவே வேலைசெய்து வருகிறேன்" என்றும் ஜுவானிட்டா கூறினார்.

# மரபோடொத்த இலக்கியம் படைக்க வேண்டும்

-- அமிர்தலிங்கம்

## உள்நாட்டு எழுத்தாளர்களுக்கு மக்கள் ஆதரவு அவசியம்

--மாணிக்கவாசகர்

## வலிமேற்கு தமிழ்விழா 2ம் நாள் நிகழ்ச்சிகள்

சுழிபுரம், செவ்வாய்

"சமீப காலத்தில் தமிழ் வளர்க்க துற்பட்டோர் மத்தியில் ஓர் குழப்பம் ஏற்பட்டுள்ளது. எதற்கும் சர்ச்சையிடும் வழக்கமும் அதிகரித்து வருகிறது. தமிழ்மரபை ஒட்டி தமிழை வளர்ப்பதா அல்லது மரபை ஒட்டாத வகையில் முற்போக்கு முறையில் வளர்ப்பதா என்பதே இந்தச் சர்ச்சையாகும். பண்டைய மன்னர்களால் காத்துவரப்பட்ட தமிழ்மரபோடு ஒட்டியிருப்பதைக் காண்கிறோம். எனவே மரபோடு ஒத்த இலக்கியம் படைக்கப்படுவது அவசியம்" அவை தான் வாழ்க்கையின் உண்மையான தோற்றத்தைக் காட்டும் என்று வலிகாமம் மேற்கு உள்ளூராட்சி மன்றங்களின் தமிழ் விழா இரண்டாம் நிகழ்ச்சியின்போது பேசுகையில் வடடுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

வலிகாமம் மேற்கு உள்ளூராட்சி மன்றங்களின் இரண்டாம் நாள் இலக்கிய விழா மானிப்பாய் பட்டினசபை முன்றலில் உள்ள சுவாமி ஞானப்பிரகாசர் அரங்கில் நடைபெற்றது. வணக்கத்துடன் ஆரம்பமான விழாவில் சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. க. கந்தசுவாமி வரவேற்புரை நிகழ்த்தினர்.

வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் விழாவை தொடக்கி வைத்தார். அவர் தமது உரையில் "மக்கள் ஆட்சி நடைபெறும் இக்காலத்தில் மக்களால் இலக்கியம் போற்றிப் பாதுகாக்க வேண்டியது இன்றியமையாததாகும். எமது மூதாதையின் இலக்கியங்களை அழியவிடாது மக்கள் முன்படைத்து வளர்க்க வேண்டும் இதற்கு மக்கள் ஆதரவு மிகவும் தேவையாகும். நமது எழுத்தாளர்களால் எழுதப்படும் நூல்களை நாம் பணம் கொடுத்து வாங்கி ஆதரவு கொடுக்க வேண்டும். இலங்கையிலுள்ள சகல நூல் நிலயங்களும் ஒவ்வோர் நூல்களிலும் இரண்டு பிரதிகளை வாங்கி வைப்பார்களானுல் அந்த ஆதரவே போதுமானது. இதனுல் நல்ல இலக்கியம் படைப்போர் மேலும் வளர்வார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை" என்று குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு கிராமசபைத் தலைவி திருமதி பேர்ளி அந்தனுசியார் தலைமையில் விழா நடைபெற்றது. அவர் தமது தலைமையுரையில்; "எமதுதமிழ் மொழியின் சிறப்பையும் இலக்கியச் செல்வங்களின் படைப்பையும் போற்றிப் பாதுகாக்க நாம் விழா எடுப்பதோடு நின்று விடாது மேலும் வளர்ப்பதற்குப் பாடுபட வேண்டும். தமிழ் வளர்த்த பெரியார்களின் தொண்டைப் பாராட்டிக் கௌரவிக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

"சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்வும் தமிழ் தொண்டும்" என்னும் பொருள்பற்றி வண. பிதா எச். என். டேவிற் உரை நிகழ்த்தினர்.

"வளரும் தமிழ்" என்னும் பொருள்பற்றி திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஒரு மொழியோ இலக்கியமோ வளர வேண்டுமானுல் முதலில் அது வளர்க்கப்பட வேண்டும். அடுத்துப் பாதுகாக்கப்பட வேண்டும். எமது மொழியை வளர்க்கும் கடமையை மக்கள் செய்ய வேண்டும். சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற அறிஞர்கள் எம் மத்தியில் வாழ்ந்ததால் தான் எமது சிறப்பு மேலோங்கியுள்ளது. அவற்றை கீழ் நோக்க விடாது பாதுகாத்து வளர்க்க வேண்டிய பொறுப்பு எங்களுடையதாகும்.

### ஒருமுகப்பட்டு வளர்க்கலாம்

வாழ்க்கையின் குறைபாடுகளை எடுத்துக் காட்டும் இலக்கியமே போற்றத் தக்கதாகும். தேசிய இலக்கியம் படைத்த காலம் இருபதாம் நூற்றுண்டுக்கு முன்னர் என்பதை நாம் மறக்கக் கூடாது. வெளிநாட்டு இலக்கியங்களை நாம் ஒதுக்க வேண்டியதும் இல்லை. உலகில் வாழும் நாலுகோடி தமிழ் பேசும் மக்களும் தமிழை ஒருமுகப்பட்டு வளர்க்க வேண்டும் குறிப்பாக நாம் தென் இந்திய தமிழர்களுடன் ஒன்றுபட்டு ஒரே இலக்கியம் படைக்கப் பாடுபட வேண்டும். அப்படிச் செய்வோமானுல் எமது மொழியும் இலக்கியமும் நன்கு வளரும்.

தமிழ் அறிஞர் வருகை இங்கு தடைப்பட்டாலும், சுவாமி தனிநாயக அடிகள் போன்றவர்களின் தொண்டை நாம் வெளி நாடுகளில் செய்யும் பேருகப் பெற்றவர்களாவோம்.

வீண் கூச்சல்களால் காலத்தைப் போக்காது நல்ல பயனுள்ள இலக்கியங்களைப்படைப்பது எமது அறிஞர் கடமையாகும். இலக்கியம் ஒரு கருவியாகும். உண்மை எவையோ அவற்றை எடுத்துக் காட்ட வேண்டும். வளரும் தமிழுக்கு உயிரூட்டுபவையே இலக்கியமாகும். தமிழுக்கு கண்போன்ற இலக்கியத்தை படைத்துக் காக்க வேண்டும்.

கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கலைநிகழ்ச்சிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்கினர்.

வித்துவான் பொன். முத்துக்குமாரன் தலைமையில் பாரதப் பாத்திரங்கள் என்ற பொருள்பற்றி; புலவர் கா. வேல்முருகன், பண்டிதர் த. சுப்பிரமணியம், வித்துவான் கணேசனர், பண்டிதை தங்கம்மா அபபாக்குட்டி, திரு. மு. சிவானந்தம், திரு. நாவேந்தன் ஆகியோர் முறையே கிருஷ்ணன், துரியோதனன், வீமன், தருமன், அருச்சுனன், கர்னன், ஆகியோரைப் பற்றி உரைகள் சமர்ப்பித்தனர்.

திரு. வி. சி. சண்முகம் நன்றியுரை கூறினர். கலை நிகழ்ச்சிகளுடன் விழா முடிவடைந்தது.

## ரோமல் இறந்து 20 ஆண்டுகள்

ஹைடன்ஹைம், அக். 13

2-ம் உலகயுத்தத்தின்போது ஆபிரிக்காவில் சண்டையிட்ட முன்னுள் ஜெர்மன் படைவீரர்கள், தங்கள் சேனுதிபதியாக இருந்து போர் நடத்திய ஜெனரல் ரோமலின் 20-ம் ஆண்டு மறைவு தினத்தைக் கொண்டாடினர்.

பீல்ட்மார்ஷல்ரோமல் நவீன கால போர் சரித்திரத்தில் ஈடு இணையற்ற சேனுதிபதியாகக் கருதப்பட்டவர். அவரது அபார போர்த்திறமை நேசதேசப் படைகளைத் தலைமை வகித்துச் சென்று ரோமனுக்கெதிராகப் போர் நடத்திய பிரிட்டிஷ் தளபதி பீல்ட்மார்ஷல் மொண்ட்கோமரி போன்றவர்களைக்கூட பிரமிப்பில் ஆழ்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

ஹிட்லரை வெளியேற்ற நடைபெற்ற சதியில் பங்கு கொண்டதாக அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டு, 1944-ம் ஆண்டு அக்டோபர் 14-ம் திகதி விஷம் அருந்திச் சாகுமாறு நாஜிகள் அவரைப் பலவந்தப்படுத்தினர்.

இங்கப் புகழ்பெற்ற தளபதியின் பிறந்த ஊரில் ரோமலின் விதவை மனைவி பிரா லூஸி ரோமலும் அவரது மகன் மான்பிரடும் இந்த ஞாபகார்த்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## இந்திய கலாசார திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், புதன்

இன்று இரவு 9 மணிக்கு மானிப்பாய் வீதியிலுள்ள 60-வது இலக்கத்திலுள்ள இலங்கை இந்தியர் சங்க காரியாலயத்தில் இந்திய திரைப்படக் காட்சிகள் காண்பிக்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாருக்கு வெற்றி?

லண்டன், அக். 13

வருகிற வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் தேர்தலில் கன்சர் வேட்டிவ் தொழிற்கட்சி ஆகியவற்றின் வெற்றிபெறும் சாத்தியம் அநேகமாக சமநிலையிலேயே இருப்பதாக பொதுக் கணிப்பு தெரிவிக்கிறது.

கன்சர்வேட்டிவ் பத்திரிகை "டெயிலி மெயில்" பத்திரிகை இந்தக் கணிப்பைப் பிரசுரித்தது. "ஒப்ஸர்வர்" பத்திரிகை பிரசுரித்துள்ள ஒரு கணிப்பில் கன்சர்வேட்டிவ்கள் ஒரு 'புள்ளி' முன்னேற்றத்துடன் காணப்படுவதாகக் கூறியுள்ளது.

## 'மக்கள்தான் பாதுகாக்க வேண்டும்'

கொழும்பு, செவ்வாய்

"இந்தக் கூட்டரசாங்கத்திற்கு தீவிர எதிரிகளும், பிற்போக்குவாதிகளும் பத்திரிகை ஸ்தாபனங்களிலும் முதலாளி வகுப்பினரிடையேயும் ஏராளமாகஇருக்கிறார்கள். ஆகையால் பொதுமக்கள் தான் இந்த அரசாங்கத்தை பாதுகாக்க வேண்டும்" என்று டாக்டர் என். எம். பெரேரா ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

## மணமகன் தற்கொலை

இரத்தினபுரி, திங்கள்

குருவித்த என்னும் இடத்தைச்சேர்ந்த ஜே. டி கொற்றேகொட என்ற ஆசிரியர் அடுக்குமீதமாக நித்திரை மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலைசெய்தார் என நம்பப்படுகிறது. இவருக்கு இம்மாதம் 19-ம் திகதி திருமணம் நடைபெறவிருந்தது.


மங்களகரமான 3வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

குயின்ஸன் (நுகேகொடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (சீகொழும்பு)

வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)



எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி

மற்றும் பலர் நடிக்கும்

பணக்கார குடும்பம்

கடைசி வாரம்!

ஸ்ரீ மனேகரா

(யாழ்ப்பாணம்) போன்: 485

தினசரி 6-30, 9-30க்கு மட்டும்

சனி, ஞாயிறு 4 காட்சிகள்

பாலசர்மா ● அசோகன்

டி. கே. பகவதி ● நரசிம்மபாரதி

ஜெயஸ்ரீ ● விஜயலக்ஷ்மி

மற்றும் பலர் நடித்த

சம்பூர்ண மகாபாரதம்

REGAL — JAFFNA

NOW SHOWING

Jack Hawkins Rosalind Russel

IN

FIVE FINGER EXERCISE




இளமங்கையருக்கு இதமான பாதணிகள்

கெயிட்டி

தயாரிப்பு பாடா



# "தங்கையின் மரணத்துக்காக அழுதுகொண்டிருந்தேன் எதிரிகள் என்னை பலவந்தமாக காரில் கடத்திச் சென்றனர்"

## பெண்கடத்து வழக்கில் இளம்பெண் சாட்சியம்

மாவிட்டபுரம், செவ்.

"இரண்டாம் எதிரி எனது தாய் மாமன். 1-ம், 3-ம் எதிரிகள் எனது மைத்துனர்கள். நாலாம் எதிரி கார் சாரதி. நான் முதலாம் எதிரியை காதலிக்கவில்லை. அவருக்கு உத்தியோகம் இல்லாதபடியால் தான் நான் அவரை விரும்பவில்லை. முதலாம் எதிரி என்னைக் கடத்திச் சென்றபடியால் அவருக்கு உத்தியோகம் கிடைத்தாலும் அவரை விவாகம் செய்ய நான் விரும்பவில்லை."

மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துருபாறு முன்னிலையில் காங்கேசன் துறை பொலிசார் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட பெண்கடத்து வழக்கில் 17 வயது நிரம்பிய சின்னத்தம்பி சிவபாக்கியத்தை எதிரிதரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் ஐந்து மணி நேரம் குறுக்குவிசாரணை செய்கையில் சாட்சி மேற்கண்டவாறு கூறினர்.

இவ் வழக்கில் அச்சுவேலியைச்சேர்ந்தவர்களான தினகரி முருகுப்பிள்ளை, செல்லர் தினகரி, தினகரி பூபாலசிங்கம், நடராசா திருநாவுக்கரசு ஆகிய நால்வரும் அதே ஊரைச் சேர்ந்த 17 வயது நிரம்பிய சின்னத்தம்பி சிவபாக்கியத்தை, முதலாம் எதிரிக்கு விவாகம் செய்யும் நோக்கத்துடன் பலவந்தமாகக் கடத்திச் சென்றதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

முதல் மூன்று எதிரிகளின் சார்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. சி. கணேசலிங்கம் ஆஜரானர். 4-ம் எதிரி சார்பில் திரு. சி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானர். காங்கேசன் துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு சி. சிவபாதத்தின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. குணரத்தினம் வழக்கை நடத்தினர்.

சிவபாக்கியம் குறுக்குவிசாரணையில் தொடர்ந்து கூறியதாவது:

நான் எஸ். எஸ். சி. வரை படித்திருக்கிறேன். என்னை எனது தகப்பனரின் தமையனர், தனக்கு பிள்ளைகள் இல்லாமையால் கடந்த 6 வருடங்களாகத் தனது மகளாக வளர்த்து வருகிறர். சம்பவ நேரம் நான் தாயாரின் வீட்டில் எனது இளைய சகோதரியின் மரணச் சடங்கிற்காகச் சென்று தங்கியிருந்தேன். எனது 17 வருட வாழ்வில் சகோதரியின் மரணச்சடங்கில் தான் முதன்முதலாக எதிரிகளைக் கண்டிருக்கிறேன். அதற்கு முன் அவர்களைக் காணவுமில்லை. அப்படியான உறவினர்கள் இருக்கிறர்களென்றும் அன்றுவரை தெரியாது. முதலாம் எதிரி மரணச்சடங்கைத் தொடர்ந்து நடைபெற்ற எட்டு நாள் கிரியைகளிலும் பங்குபற்றினர். அந்த எட்டு நாளிலும் அவர் மத்தியானமும் இரவும் எங்கள் வீட்டில்தான் சாப்பிட்டார். அவருக்கு என்னில் அக்கறை இருக்கிறதோ என்றும் தெரியாது. அவருடன் கதைக்கவுமில்லை. நான் வயது வந்த பெண்ணுனபடியால் அவரைக் கவனிக்கவில்லை. சம்பவதினம் காலை 9-30 மணியளவில் வீட்டில் இருந்தேன். எனது தாயாரும் மற்றும் மூன்று பெண்களும் வீட்டின் நடுப்பகுதியிலிருந்து சகோதரியின் மரணத்தினல் அழுதுகொண்டிருந்தார்கள். இதனல் எனக்கும் அழுகை வந்துவிட்டது. நானும் அழுதுகொண்டிருந்தேன். திடீரென முதலாம் எதிரி என் பின்னல் வந்து என்னை இரண்டு கைகளாலும் கட்டிப்பிடித்துத் தூக்கி முற்றம்வரை இழுத்துக் கொண்டு போனர். நான், 'ஐயோ! ஐயோ! என்னைக் கொல்கிறர்கள், என்னைக் கொண்டு போகிறர்கள்' என்று கூச்சலிட்டேன். எனது கூக்குரல்கேட்டுபலர் வந்தார்கள். எனது தாயார் ஓடிவர அவரை இரண்டாம் எதிரி தள்ளிவிட்டார். அவர் நிலத்தில் விழுந்தார். என்னை முதலாம் எதிரி தூக்கிக்கொண்டுபோய் காரின் பின் ஆசனத்தில் போட்டார். மூன்ரும் எதிரி எனது காலைப் பிடித்து காரினுள் தள்ளிவிட்டார். என்னைக் காரின் பின் ஆசனத்தில் தள்ளிவிழுத்தினர்கள். எனது வாயை துவாயால் மூடினர்கள். அதன்பிறகு தயாருக்கு என்ன நடந்தது என்று தெரியாது. காரில் பின் ஆசனத்தில் எனக்கு இரு பக்கத்திலும் 1-ம், 3-ம் எதிரிகள் இருந்தார்கள். 4-ம் எதிரி காரை மானிப்பாய்க்கு ஓட்டிச் சென்ருர்கள். அங்கு என்னை ஒரு முதலியாரின் வீட்டிற்குக் கூட்டிச் சென்ருர்கள். அந்த வீட்டில் உள்ள ஒரு பெரியவர், என்னை வீட்டில் கொண்டுபோய்விடும்படி எதிரிகளுக்குப் புத்திமதி கூறி எதிரிகளை அங்கு தங்க அனுமதிக்கவில்லை. இதனல் என்னை பருத்தித்துறைக்கு ஒரு சார்ஜண்ட் வீட்டுக்கு எடுத்துச் சென்ருர்கள். அங்கு என்னை வீட்டிற்குள் விட்டுப் பூட்டினர்கள். இங்கிருந்து இரவு 10 மணிக்கு என்னை அச்சுவேலி கூட்டிச் செல்வதாகக் கூறி மீசாலைக்கு வேலுப்பிள்ளை என்பவரின் வீட்டிற்குக் கூட்டிச் சென்ருர்கள். அங்கு முதலாம் எதிரி என்னுடன் உடலுறவு வைத்தார் என்பதை நான் மறுக்கிறேன்.

நான் வேலுப்பிள்ளையுடன் அச்சுவேலி திரும்பியதும் பொலிஸ் சார்ஜன்ட் தம்பிப்பிள்ளை எனது வாக்குமூலத்தை எழுதினர். நான் அவரிடம் என்னை டாக்டர் பரிசோதிக்கத் தேவையில்லை என்று சொன்னேன். எதிரிகள் என்மேல் பலாத்காரம் செய்யாமையால் டாக்டர் சோதிக்கத் தேவையில்லை என்றேன்.

நான் கதைப்புத்தகங்களைப் படிப்பதில்லை. எனது 17 வருட வாழ்க்கையில் படம் பார்க்கவில்லை. பத்திரிகையில் வரும் சினிமா விளம்பரங்களையும் படிப்பதில்லை. பெரிய தகப்பனருடன் கோவில்களுக்குப் போவேன். கடந்த ஆறுவருடத்தில் மூன்றுதடவை கொழும்புக்கு பெரிய தகப்பனருடன் சென்றிருக்கிறேன். ஆனல் அங்கும் படம்பார்க்கவில்லை.

மேல் விசாரணை இம்மாதம் 30-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

---

## 'மரவரியின் கர்த்தா என். எம். தான்'

கொழும்பு, செவ்.

"மரவரி பற்றிய பிரேரணையைக் கொண்டுவந்தது நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவும் அவருடன் கூட்டு அரசாங்கத்தில சேர்ந்த சகாக்களுமே. இந்தத்திட்டம் ஏற்கனவே சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெறவில்லை" என்று சார் லலிதா ராஜபக்சா ஆடியம்பலம என்ற இடத்தில் பேசும்பொழுது கூறினர்.

---

## கர்ப்பிணி தற்கொலை

பத்தேகம, திங்கள்

கர்ப்பினியான கரோலின் என்ற பெண் தமது இரண்டு பிள்ளைகளுடன் ஆற்றில் குதித்தார். ஒரு குழந்தை மட்டும் காப்பாற்றப்பட்டது. மற்றக் குழந்தையும் தாயும் நீரில் மூழ்கி மரணமானர்கள்

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் திருடவில்லையென்று சாதித்தான். "இவன் மிக நல்லவன். வாட்சைக் கொடுத்து விட்டால் கேஸ் போடாமல் விட்டுவிடுகிறீர்களா?" என்று பொலிஸ்காரர் கேட்டதற்கு, பறிகொடுத்தவர் "சரி" என்று ஒப்புக் கொண்டார். உடனே அவன் தன் கையில் ஒரு கைக்குட்டையில் சுற்றி வைத்திருந்த வாட்சை கீழே அப்படியே போட்டு விட்டான். அதை எடுத்துக் கொண்டு, பொலிசார் அவனைப் பிடித்து ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று வழக்குப் போட்டுள்ளதாயும், இதற்காக, மலைநாட்டிலிருந்து ஒவ்வொரு தவணைக்கும் அந்த அன்பர் சங்கடப்பட்டுக் கொண்டே வருவதாயும் அறிந்தேன்.

திருட்டைப் பற்றி பொலிஸாரிடம் புகார் செய்யவே பலர் தயங்குகிருர்கள். புகார் செய்துவிட்டால், பின்னர் காடையர்கோஷ்டியினர், அவரை நிம்மதியாக வாழ விடமாட்டார்கள் என்று பயம்! புகார் செய்தால்தானே நாங்கள் முயன்று திருடரைப் பிடிக்கலாம் என்று பொலிசார் கூறுகிருர்களாம்!

காடையர் ராஜ்யம்தான் இங்கு நடக்கிறது. முன் காலத்தில் செட்டியார் தெருவில் கட்டுக்காவல் மிக அதிகம். கடைக்காரரெல்லாம் சேர்ந்து ஒரு வீரரை தெருக்காவலுக்கு நியமித்திருந்தனர். கள்வர் யாரும் அங்கு தலைகாட்ட மாட்டார்களாம். ஆனல் இப்போதுநிலைமை முற்றிலும் மாறிவிட்டது. செட்டியார்தெருவிலேயுள்ள மூன்று கோவில்களுக்கிடையிலே, பிள்ளையாரும் இரு கதிரேசர்களும் பார்த்துக் கொண்டிருக்க, பட்டப் பகலிலேயே வழிப்பறிக் கொள்ளைகள் நடக்கின்றனவாம்! கொழும்பிலே மிக நாகரிகம் முற்றிவிட்டது!

விசேஷ பொலிஸ் காவல் போட்டு, பொது மக்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கக் கடமை. ஆனல் அங்கு காவல் போட்டால், மற்ருேர் இடத்துக்கு வழிப்பறிக்காரர் மாறிவிடலாம். அதனல் நாம் வாட்ச், பவுண்டன் பேனு, பணம் எதுவும் இன்றி, செல்லுவதே உத்தமமாகும்!

* * *

இந்திய ஹைகமிஷனர் கபூரும், முதல் காரியதரிசி ராஜ்குமாரும டில்லிப் பேச்சுக்காக நேற்று கொழும்பிலிருந்து விமான மார்க்கமாகச் சென்றனர். நவம்பர் முதல் வாரம் இங்கு திரும்புவரென்று தெரிகிறது.

ஏற்கெனவே இவ்விஷயமாக தலைவர் அஸீஸ், பிரதமரைப் பார்க்க விரும்பியதற்கு வெளிநாட்டு நிரந்தரக் காரியதரிசி தம்மைக் கண்டு பேசலாம் என்று எழுதியிருந்தாராம். ஆனல் அரசியல் விஷயங்களைப் பற்றியும் பேசவேண்டியிருக்குமாதலால், பிரதமருடனேயே தாம் பேசவிருப்பதாக அஸீஸ் பதில் எழுதிவிட்டதாகத் தெரிகிறது!

டில்லிப் பேச்சுக்கள் மூலம் ஒரு சமரச ஒப்பந்தம் கையெழுத்தாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

வெள்ளைத் தாமரைப் பூவில்
இருப்பான்,
வீணைசெய்யும் ஒலியில்
இருப்பாள்,
கொள்ளையின்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத்
திருப்பாள்,
உள்ளதாம் பொருள் தேடி
யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்
நின்றெளிர்வாள்,
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்துட்
பொருளாவாள்.
—பாரதியார்


## தேவை

### கிளிநொச்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

**1. களஞ்சியப் பொறுப்பாளர்**

தகைமைகள்: (அ) கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவோ, அல்லது கனிஷ்ட தராதரப் பரீட்சையில் கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் சித்தியடைந்தவராயும், கூட்டுறவுப்பயிற்சியில் சித்தியடைந்தவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது 25—35

(இ) பிணை:- உரொக்கம் ரூபா 1000/-, ஆதனம் ரூபா 3000/-

(ஈ) சம்பளம் 125/-—200/- / 10 X 7.50

வியாபார அனுபவமுடையவர்க்கு விசேட சலுகை காண்பிக்கப்படும்.

**2. லிகிதர்**

(அ) ஆங்கில சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்களுடன் சித்தியடைந்தவராகவும், கூட்டுறவுப்பயிற்சியில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது 22—35

(இ) சம்பளம் 125/-—200/- / 10 X 7-50

(ஈ) கணக்கு வைக்கும் முறையில் சித்திபெற்றவருக்குவிசேட சலுகை காண்பிக்கப்படும்.

**பொது**

(அ) ஆண், பெண் ஆகிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(ஆ) அண்மையில் கிடைக்கப்பெற்ற இரு குணநலச்சான்றுப் பத்திரங்களின் பிரதியும், கல்விச் சான்றிதழ்களின் பிரதிகளும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும்.

(இ) விசேட தகுதி பெற்று எம்மால் தெரிவுசெய்யப்பட்டவர், மேல் குறிக்கப்பட்ட சம்பள விகிதத்தில் தகுதிக்கேற்ற ஆரம்ப சம்பளம் பெறலாம்.

(ஈ) களஞ்சியப் பொறுப்பாளர் பதவிக்கு தெரிவுசெய்யப்படுபவர் 1-11-64-ல் பதவி ஏற்க ஆயத்தமாய் இருத்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பங்கள் 19-10-64 நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக, தலைவர், கிளிநொச்சி மேற்கு ப. நோ. கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். 940


## வானெலி நிகழ்ச்சிகள்

### புதன் 14-10-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 காலைக்கதிர், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-10 விலைவாசிகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாணிவிழா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நவராத்திரி கவியரங்கம், 9-45 பாட்டு — ருக்மணி சர்மா.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-45 நிகழ்ச்சிக் குறிப்புகள், 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 கலைமகள் இசைச்சித்திரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 அணி அலங்காரம் (ஹாஸ்ய கதாகால க்ஷேபம்), 1-00 பெண்ணுலகம் — இசைச்சித்திரம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 கே. எஸ். பி. விசுவலிங்கம் — பாட்டு, 2-40 ஜெபபேரிகை.

மாலை 5-15 வாத்தியக் கோஷ்டி, 5-45 ஒலிப்பதிவுகள், 6-06 பிராந்திய செய்திகள்.

இரவு 6-15 செய்திக்குறிப்புகள், 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 செய்திஅரங்கம், 7-45 நாடகம் — "அன்பு மனம்", 8-00 திரைப்படஇசை, 8-35 பொன்னெளிர்பாரதம், 8-45 குரல்இசை, 9-45 இசை மாலை, 10-00 கே. எஸ். பி. விஸ்வலிங்கம் — பாட்டு.


### வரி விளம்பரம்

அனுபவம் வாய்ந்த சீன நிபுணரால் இயற்கை அமைப்புக்கேற்ப பற்களைக் கட்டுவதற்கு உகந்த இடம் யாழ்ப்பாணத்தில் இது ஒன்றே. கண் பார்வை பரிசோதனை செய்தும், டாக்டரினல் சிபார்சு செய்த கண்ணடிகள் அழகிய பிரேம்களில் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். எஸ். எம். பெர்னுண்டோ, பிரதானவீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணம். 895

**புத்திரபாக்கியம்**

பெண்களில் மலடு கிடையாது. புத்திரபாக்கியம் இல்லையே என்று கவலை இனி வேண்டாம். நூற்றுக்கணக்கானேர் என்னிடம் மருந்து சாப்பிட்டு பிள்ளையும் பெற்றிருக்கிருர்கள். பொ. செல்லையா, ஆயுர்வேத வைத்தியர், கந்தர் மடம், யாழ்ப்பாணம். 882

"அது வெளியே பெருமளவு சளியைக் கொண்டுவந்தது. அதற்குப் பிறகு குழந்தை மிகவும் ஆறுதலாக இருந்தது."

— திருமதி சி. ஜி.




உங்கள் குழந்தையின் நன்மைக்காக எப்பொழுதும் கிரேசன்ஸ் வேப்பர் கிரீமையே கேட்டுவாங்குங்கள்.

எல்லா மருந்துக் கடைகளிலும், பலசரக்குக் கடைகளிலும் கிடைக்கும்.


## "சக்திவழிபாடுதான் என்னே"

யாழ்ப்பாணம், புதன்

"எமக்கோ, எம்மினத்திற்கோ அதர்மவழியில் அநியாயங்கள் ஏற்படும்போது பொறுமையை போற்றுகின்றேம் எனக்கூறிக் கொண்டு பேசாதிருத்தல் உண்மையான பொறையுடமை ஆகாது. அறவழியில் எதிர்க்கவேண்டும். அதற்குத்தான் சக்தியை வழிபடுகின்றேம். உடல் வாழ உணவும், உயிர் வாழக்கலையும், இரண்டும் சேர்ந்து வாழ வீரமும் அவசியம். எனவேதான் திருமகளையும், கலைமகளையும், துர்க்கையையும் வழிபடுகிறேம்" என திரு. மு. சிவானந்தம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் நவராத்திரி விழாவிற் பேசும்போது குறிப்பிட்டார்.

# கைதடி கொலை வழக்கு புதிய ஜூரிசபைமுன் விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

கைதடி குண்டுமணி கொலை வழக்கு நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு. தம்பையா கியூ. சி. முன்னிலையில் நேற்றுக் காலை 2-வது தினமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நீதியரசர் இவ் வழக்கு மீண்டும் புதிய ஜூரிசபை முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமெனத் தெரிவித்தார்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஆர். ஐ. ஒபயசேகரா சுகயீனம் காரணமாக கொழும்பு சென்றுள்ளதாகவும் அவருக்கு பதிலாக வேறு முடிக்குரிய வழக்கறிஞர்கள் வரமாட்டார்களென்றும், அடுத்த திங்கட்கிழமைவரை இவ் வழக்கை ஒத்திப்போடுவதாக நீதியரசர் தெரிவித்தார்.

தற்பொழுதுள்ள ஜூரிசபையினர், மீண்டும் இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் தினம் வரை, இவ் வழக்கு விசாரணையை மறந்துவிடுவார்களென்றும், ஆதலால் புதிய ஜூரிகள் முன்னிலையில் மீண்டும் இவ் வழக்கு ஆரம்பத்திலிருந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென நீதியரசர் மேலும் தெரிவித்தார்.

19-ந் திகதி திங்கட்கிழமை அசைஸ் நீதிமன்றம், மீண்டும் கூடும்பொழுது இவ் வழக்கு புதிய ஜூரர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்படும்.

# நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், புதன்

காலைநகர், யாழ். நகர்க் கல்லூரியில் சரஸ்வதி விழா திங்கட்கிழமை தொடக்கம் நடைபெற்றுவருகிறது. திங்கட்கிழமை மாலை திருமதி ஜானகி சங்கரய்யர், மாஸ்டர் அகிலன் ஆகியோரது சங்கீதக்கச்சேரி நடைபெற்றது.

நேற்று மாலை 5-30 மணிக்கு யாழ். நார் கலாசாலை மாணவ மாணவிகளது பாட்டும், செல்வி நாகேஸ்வரி அருளம்பலத்தின் 'நக்கீரதேவர்' என்னும் பொருள்பற்றிய சங்கீத கதாப்பிரசங்கமும் நடைபெற்றபின், "மகிஷாசுர வதம்" என்னும் பொருள்பற்றி கிராமணி, முத்தமிழ்ச் செல்வி ராதா சோமசுந்தரம் காலாட்சேஷபம் செய்தார்.

இன்று மாலை 6 மணிக்கு இணுவில் பிரம்ம ஸ்ரீ வீரமணி ஐயர் "பக்த கௌரி" என்னும் விஷயம் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

நாளை காலை 9 மணிக்கு சரஸ்வதி பூசையும், கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற இருக்கிறது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி வாகீசர் மண்டபத்தில் இன்றும் நாளையும் சரஸ்வதிபூசை, விஜயதசமி விழாக்களைக் கொண்டாடுகிறார்கள். விழாவில் இன்றைய நிகழ்ச்சிகளாக 'நவராத்திரி மகிமை' என்னும் பொருள் பற்றி திரு. மு. கந்தையாவின் சொற்பொழிவும், பக்திப்பாடல்களும், இராமநாதன் இசைக்கல்லூரி மாணவிகளின் இசைக்கச்சேரியும் இடம்பெறும்.

நாளைய நிகழ்ச்சியின்போது உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார். இளைப்பாறிய மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. சி. எஸ். நவரத்தினத்தின் 'இலங்கையில் இந்து சமய வரலாறு' என்னும் நூலை வைத்தீஸ்வரக் கல்லூரி அதிபர் திரு. எஸ். அம்பிகைபாகன் வெளியிட்டு வைப்பார். மேற்படி விழாவை மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் ஏற்பாடு செய்துள்ளனர்.

∴ ∴ ∴

உடுப்பிட்டி-வத்தனை இந்து சன்மார்க்கசங்கத்தினர் இன்று மாலை திரு. ஆ. செ. ஆறுமுகம் தலைமையில் சரஸ்வதி பூசையைக் கொண்டாடுகிறார்கள்.

திரு. செ. செல்வரத்தினத்தின் கூட்டுப்பிரார்த்தனையுடன் ஆரம்பமாகும் இவ் விழாவில் திரு. கோ. செல்வநாதன், திரு. க. முத்துவேலு, திரு. க. முத்துக்குமாரசாமி ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

∴ ∴ ∴

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய இந்து மாமன்றம் இன்றும் நாளையும் கலைமகள் விழாவை நடத்த ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது.

இன்றும் நாளையும் பிற்பகல் 2 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நடைபெறும் இந்த விழாவில் பிரபல அறிஞர்கள் சொற்பொழிவாற்றவிருக்கின்றார்கள். இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன.

∴ ∴ ∴

தெல்லிப்பழை வீமன்காமம் இளைஞர் சங்கத்தின் ஆதரவில் இன்றும் நாளையும் நவராத்திரி விழா 7 மணி தொடக்கம் சிறப்பாக கொண்டாடப் படும். பல கலை நிகழ்ச்சிகள் இவ்விரு தினங்களிலும் இடம் பெறும்.

∴ ∴ ∴

கொட்டடி இளைஞர் சங்கம் இன்று மாலை 6 மணியளவில் கலைமகள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடவிருக்கின்றது.

∴ ∴ ∴

ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தில் கலைவிழா இன்று இரவு 7 மணிக்கு நடைபெறும்.

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலையிலும், விக்கினேஸ்வர வித்தியாசாலையிலும், அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் சரஸ்வதிபூசை இன்று நடைபெறும்.

∴ ∴ ∴

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இந்து வாலிபர் சங்க ஆதரவில், கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் கலைமகள் விழா நடைபெறும். மாலை 7-30 மணிக்கு வண்ணை முத்தமிழ் மணி சி. எஸ். எஸ். மணிபாகவதர் 'கம்பனும் கலைவாணியும்' என்னும் பொருள் பற்றிக் கதாபபிரசங்கம் செய்வார்.

∴ ∴ ∴

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று நடைபெறும் கலைவிழாவில் செல்வி புஷ்பா செல்வநாயகம் 'நவராத்திரியின் மகிமை' என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்துவார். இசைக் கச்சேரிகளும் நடைபெறும்.

---

## பட்டினசபைத் தேர்தல்

ஊர்காவற்றுறை, செவ்வாய்

ஊர்காவற்றுறை பட்டினசபையின் புதிய தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இந்த மாதம் 27-ம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை ஐந்துவட்டாரங்களிலும் போட்டி பலமாகவிருக்கும் எனச் சொல்லப்படுகிறது. தமிழரசுக்கட்சி ஆதரவாளர் எல்லா வட்டாரங்களிலும் அபேட்சகர்களாய் நியமிக்கப்படுவார்கள் எனவும் அறியப்படுகிறது.

## பௌர்ணமி தினம் விடுமுறையாகும்

கொழும்பு, செவ்வாய்

பௌர்ணமி தினங்களைப் பொது விடுமுறையாக்குவது என்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இத்திட்டம் இம்மாதம் முதல் அமுலுக்கு வருகிறது. இதற்கிணங்க இம்மாதம் 20-ந் திகதி முதலாவது விடுமுறை தினமாகப் பிரகடனப் செய்யப்பட்டுள்ளது.

## இந்திய-ஆஸி. கிரிக்கெட் டெஸ்ட்

பம்பாய், அக். 14

ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெறும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் இன்று இங்கு தொடர்ந்து நடைபெறும், இன்று நான்காவது நாளாகும். ஆஸ்திரேலியா தனது 2-வது இன்னிங்ஸில் 1 விக்கட் நஷ்டத்துக்கு (சிம்ஸன் ஆட்டமிழந்தார்) 112 ஓட்டங்கள் எடுத்திருக்கிறது. மூன்றாவது டெஸ்ட் கல்கத்தாவில் நடைபெறும்.

## லண்டன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது பிரிவு: ஹோனர்ஸ் (லோவர் டிவிஷன்) ஆர். அருளானந்தன், ரி. தனபாலா, கே. திருச்செந்துருநாதன். இவர்கள் மூவரும் யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்தவர்கள். எஸ். பரமசாமி, (தனிப்பட்ட பரீட்சார்த்தி).

சாதாரண சித்திபெற்றவர்கள்: ஏ. குமாரசிங்கம் (அக்குவனர்ஸ் பல்கலைக்கழகம்), எஸ். கணேசன், ஏ. நடராசா, ஞானம்பிகை பொன்னையா, ஆர். சற்குணம், ஏ. சண்முகசாமி, எஸ். சிவநேசன்.

முதலாவது பகுதியில் சித்திபெற்றவர்கள்: எஸ். சொக்கலிங்கம் (யாழ்ப்பாணக் கல்லூரி), எம். டபிள்யூ. ஐயாத்துரை, எம். எஸ். ரத்னசபாபதி.

சட்டம்: (எல் எல். பி. பரீட்சை) இரண்டாவது பிரிவு ஹோனர்ஸ் (லோவர் டிவிஷன்): தம்பு கனகசபை. முதலாவது பகுதி: சி. பாலகுமாரன், எஸ். ஜே. துரைசாமி, என். ரத்னசபாபதி.

## கிரிதரை ஆலை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வித்தல்கொடுத்த திரு. பீட்டர் கெனமன் இப்பொழுது வெளிநாட்டில் இருக்கிறார். இவருக்குப் பதிலாக வேறு யாராவது இப்பிரேரணையைப் பிரேரிப்பார்களா என்று சிலர் எதிர்பார்க்கின்றனர்.

நேற்று டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவும், திரு. லெஸ்லி குணவர்த்தனவும், கம்யூனிஸ்ட் அங்கத்தவர் டாக்டர் விக்கிரமசிங்காவுடன் சம்பாஷணை நடத்தினர். டாக்டர் விக்கிரமசிங்கா இன்று ரஷ்யா புறப்படுகிறார்.

கிரிதரை ஆலை விவகாரத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் அரசாங்கம் தடைசெய்யுமானால் அதற்கு மாற்று மருந்துகாணும் வழிவகைகளைக்காண்பதில் எதிர்க்கட்சியினர் மும்முரமாக ஈடுபட்டுககொண்டிருந்தனர். திருவாளர்கள் டட்லி சேனநாயக்கா, ஜே. ஆர். ஜயவர்த்தன, டபிள்யூ. தகநாயக்கா, எட்மண்ட் சமரக்கொடி ஆகியோர் நேற்று மாலை இதுபற்றி ஆலோசனை செய்தனர்.

### பாதுகாப்பு நடவடிக்கைகள்

இவற்றுக்கிடையே பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளும், விவாதத்தின்போது பலப்படுத்தப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. உயர்தர பொலிஸ் அதிகாரியொருவர் நேற்று மாலை பார்லிமெண்ட் கட்டிடத்துக்கு விஜயஞ்செய்து ஏற்பாடுகளைக் கவனித்தார்.

# வீதியோரத்தில்கிடந்தகுறைமாத சிசு யாருடையது?

யாழ்ப்பாணம், புதன்

குறைமாதச் சிசு ஒன்று நேற்றுமுன் தினம் காலை யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்திற்கருகில் வீதியோரத்தில் காணப்பட்டது. இச்செய்தி உடனடியாக நகர் முழுவதும் பரவி பலர் அக்குழந்தையை சென்று பார்வையிட்டனர். கருவில் நான்கு மாதமே வளர்ந்த இச்சிசு சரியாக உருவம்பெறவில்லை.

அன்றுமாலை மாஜிஸ்டிரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் அவ்விடத்திற்கு வந்து விசாரணை நடத்தினார். இதுசம்பந்தமாக எவ்வித சாட்சியமும் கிடைக்கவில்லை. அக்குழந்தை நான்குமாத வளர்ச்சி பெற்றிருப்பதாக விசாரணையின் போது தெரியவந்தது.

மாஜிஸ்டிரேட் அவ்விடத்திற்கு வருவதற்கு முன்பே பொதுமக்கள் கூட்டம் அதிகரிக்கவே, பொலிஸார் அக்குறைமாதச் சிசுவை ஒரு 'காட்போர்ட்' பெட்டியால் மூடிவிட்டார்கள்.

அக்குறைமாதக் குழந்தை அவ்விடத்திற்கு எப்படிக் கொண்டுவரப்பட்டதென்பது பற்றியும் அக்குழந்தை யாருடையதென்பதுபற்றியும் விசாரணையின்போது எதுவித சாட்சியமும் கிடைக்கவில்லை. யாழ்ப்பாணம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகிறார்கள்.

## குழந்தையிடம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டில் நிற்கும் எதிரி. அன்று அவர் எங்கள் வீட்டிற்கு வந்து ஆன்ரி எங்கே என்று கேட்டார். அவர் வெளியில் போய் விட்டார் என்று சொன்னேன். பேத்தி எங்கே என்று கேட்டார். மீன் வாங்க சந்தைக்கு போய்விட்டதாகக் கூறினேன். பின் அவர் குடிப்பதங்கு தண்ணீர் தரும்படி கேட்டார். நான் தண்ணீர் எடுத்துக் கொண்டுவர உள்ளே போனேன். அப்பொழுது எனது தங்கை மட்டும்தான் எதிரியுடன் இருந்தார். நான் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தேன். அவர் வெளியில் டாக்ஸி நிற்பதாக உறிவிட்டு போனார். ஆனால் திரும்பி வரவில்லை. எனது தங்கையின் கையில் காப்பு காணாதலை கவனித்தேன். எனது மாமா வந்ததும், அவரிடம் எல்லாவற்றையும் கூறினேன். பின் மாமாவுடன் சென்று எதிரியை காட்டினேன்.

ஏ. மார்க்கண்டு, பொலிஸ் கான்ஸ்டபிள் சோமசிறி ஆகியோர் சாட்சியமளித்தார்கள். 'டயமன் ஹவுஸில்' ஒரு சோடி காப்பையும். நிசீற்றையும் எடுத்ததாகவும் அக்காப்பை குழந்தையின் மாமன் அடையாளம் கண்டு கொண்டதாகவும் கான்ஸ்டபிள் சாட்சியமளித்தபோது கூறினார்.

எதிரி சார்பில் புறக்டர் ஜிம்மி ராஜரத்தினம் ஆஜரானார். வழக்காளி தரப்பில் இன்ஸ்பெக்டர் பி. கனகசிங்கம் வழக்கை நடத்தினார். எதிரி தான் சுற்றவாளி என்று கூறியதை தொடர்ந்து மாஜிஸ்திரேட் இவ்வழக்கை அடுத்த வருடம் ஜனவரி 5-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

## மந்திரிசபையின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் புதிய மசோதாபற்றிய முடிவுகளையும் அவர் இக்கூட்டத்தில் விளக்குவார்.

லேக்ஹவுஸ் பத்திரிகைகளை பொறுப்பேற்கும் மசோதா அநேகமாக வியாழக்கிழமை தான் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படுமென்றும் பிரதமர் இங்கு வந்த பின்னரே அதன் மீதான விவாதம் நடைபெறுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## இன்று பெருமாள் கோயில் தேர்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் கோயில் சித்திர ரதோற்சவம் இன்று நடைபெறுகிறது.

முற்பகல் பத்து மணிக்கு காலசந்திப் பூசையும் 10-15க்கு கொடிமரப்பூசையும் 10-30க்கு வஸந்த மண்டபப் பூசையும் 11 மணிக்கு கெத்தோற்சவமும் நடைபெறும். 11-30 மணிக்கு சுவாமி தேருக்கு எழுந்தருள்வார் பிற்பகல் 3 மணிக்கு சுவாமி தேரிலிருந்து இறங்குவார். என். கே. பத்மநாதன் கோஷ்டியினரதும் சின்னப் பழனி கோஷ்டியினரதும் நாதஸ்வர, தவில் கச்சேரிகள் திருவிழாவில் இடம்பெறும்.

நாளை தீர்த்தோற்சவமும் வெள்ளிக்கிழமை மாலை திருக்கல்யாணமும் நடைபெறும்.

## ரயில் விபத்து நால்வர் பலி

பம்பாய், அக். 13

இன்று பிற்பகல் இங்கு மின்சார ரயில் ஒன்று, நின்று கொண்டிருந்த ரயில்மீது மோதியதில் இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இருவர் ஆஸ்பத்திரியில் மரணமானார்கள். 32 பேர் காயமடைந்துள்ளனர்.

## சூறவளிக்கு 32 பேர் பலி

லண்டன், அக். 13

ஹாங்காங்கில் இன்று ஏற்பட்ட சூறவளியினால் 32 பேர் பலியானார்கள் என்றும் 16 பேரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொலைவழக்கு ஒத்திவைப்பு

ஊர்காவற்றுறை, செவ்வாய்

புங்குடுதீவைச்சேர்ந்த கே. சின்னத்துரை என்பவரை உலக்கையால் அடித்துக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டி அதே இடத்தைச் சேர்ந்த அவரது உறவினரான எஸ். சோமசுந்தரம் என்பவர் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சென்ற கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

புங்குடுதீவு வாசியான கோவிந்தன் ஐயாத்துரை சாட்சியளித்தார். வழக்கறிஞர் திரு. கணேசலிங்கம் சாட்சியை குறுக்குவிசாரணை செய்தார்.

நீதிபதி மேல் விசாரணையை இந்த மாதம் 23-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## தமிழரசுக்கழகத்தினர் 9 பேருக்கு தடுப்புக்காவல்

சென்னை, அக். 13

தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த 9 பேர் இன்று தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். தமிழ்நாடு முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் இன்று கோயம்புத்தூர் செல்வதை முன்னிட்டுக் கறுப்புக்கொடி காட்டத் திட்டமிட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தகவல் பகுதியினரின் படக் காட்சி

உடுப்பிட்டி, செவ்.

இந்திய கலாச்சார தகவல் பகுதியினரால் நெல்லியடி மகாத்மா தியேட்டரில் இலவச படக் காட்சியொன்று காண்பிக்கப்பட்டது. இப்படக்காட்சியை உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஆரம்பித்து வைத்தார்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 6-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.